# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

TNROA

(அரசு ஆணை எண் : 2141 நாள்: 06.10.1966 ன் படி அங்கீகரிக்கப்பட்டது)
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம், சேலம்
Visit : www.tnroaslm.com


மாவட்டத்தலைவர்
**அ.அருள்பிரகாஷ்**

மாவட்டச்செயலாளர்
**வெ.அர்த்தனாரி**

மாவட்டப்பொருளாளர்
**மா.அகிலன்**

மாவட்ட துணைத்தலைவர்கள் (நகரம்)
**ஈ.அ.பிரபு**
**வெ.கோபாலகிருஷ்ணன்**

மாவட்ட துணைத்தலைவர்கள் (புறநகர்)
**பி.ஏ.சாஜிதாபேகம்**
**பெ.அசோக்**

மாவட்ட இணைச்செயலாளர்கள் (நகரம்)
**மா.முருகபூபதி**
**ரா.சுமதி**

மாவட்ட இணைச்செயலாளர்கள் (புறநகர்)
**மு.சிவகுமார்**
**ஆ.கோவிந்தராஜ்**

மத்திய செயற்குழு உறுப்பினர்கள்
**சு.ரமேஷ்**
**ப.சிவராஜ்**
**சி.பார்த்தசாரதி**


நாள்: ___________

**பெறுதல்**

மாநில தலைவர் / மாநில பொதுச்செயலாளர்
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்,
12-கிருஷ்ணப்பா தெரு, சேப்பாக்கம்,
சென்னை-600 005.

**அன்புடையீர்,**

பொருள் - சேலம் மாவட்ட வருவாய் அலகு - வருவாய்த்துறை அலுவலர்களின் நலன் குறித்த மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 14.10.2024-ல் நடைபெற்றது தீர்மானங்கள் நிறைவேற்றியது - தொடர்பாக.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டம் 19.10.2024 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறுவது அதன் தொடர்ச்சியாக அக்கூட்டத்தில் வழங்கப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து சேலம் மாவட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மாவட்டத்தலைவர் திரு.அருள்பிரகாஷ் அவர்கள் தலைமையில் 14.10.2024 திங்கட்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் சேலம் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் பல்வேறு பிரச்சினைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த விவாதங்களின் அடிப்படையில் 10 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தீர்மானம் - 1**

தமிழக அரசு தமிழகம் முழுவதுமுள்ள நில எடுப்பு பிரிவுகளின் பணியிடங்களை ஒருங்கிணைத்து பணிநிரவல் என்கிற அடிப்படையில் மாவட்டம் முழுவதும் உள்ள நில எடுப்பு பணியிடங்களை எண்ணிக்கையின் அடிப்படையில் குறைத்து அரசாணை எண்.39 வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையின் பேரில் சேலம் மாவட்ட வருவாய் அலகில் இரண்டு வட்டாட்சியர்கள், நான்கு துணை வட்டாட்சியர்கள், ஐந்து முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் பணியிடங்கள் கலைக்கப்பட்டுவிட்டன. இரண்டு வட்டாட்சியர் மற்றும் நான்கு துணை வட்டாட்சியர்கள் பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் சேலம் மாவட்ட வருவாய் அலகில் பதவி உயர்வு வழங்குவதில் பெரும் நெருக்கடி உள்ளது. அரசாணை எண்.39 ன்படி சேலம் மாவட்ட வருவாய் அலகில் தற்போது கலைக்கப்பட்டுள்ள சென்னை - கன்னியாகுமரி தொழில் வழித்தட நிலஎடுப்பு தனி மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் சாலை விரிவாக்கத்திற்கு நில எடுப்பு செய்யப்பட்டு 128 நில உரிமையாளர்களுக்கு ரூ.2.17 கோடி இழப்பீடு தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது. இழப்பீடு பெற்ற நில உரிமையாளர்கள் உயர்த்தப்பட்ட இழப்பீட்டு தொகை வழங்கக்கோரி 519 வழக்குகளை (RTROP) நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். இதில் 440 வழக்கு இனங்களுக்கு எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட வேண்டி நிலுவையில் உள்ளது. கேட்புத்துறையினர் கூடுதல் நிலங்கள் கோரி நில எடுப்பு அட்டவணை அனுப்பியதன் பேரில் சங்ககிரி வட்டத்தில் ஏழு கிராமங்களில் 16906 ச.மீ நிலஎடுப்பு பணிகள் முழுமை பெறாமல் நிலுவையில் இருந்து வருகிறது. மேலும், 31374 ச.மீ அரசு புறம்போக்கு நிலங்களை நிலமாறுதல் செய்யக்கோரி மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இவ்வாறாக எண்ணற்ற பணிகள் நிலுவையில் இருந்து வரும் சூழ்நிலையில் இந்த அலுவலகம் முழுமையாக கலைக்கப்பட்டுள்ளது. நில எடுப்பிற்கான ஒருங்கிணைந்த மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தை அரசாணை எண்.39 ன் படி ஏற்படுத்தியிருந்தாலும், மேற்கண்ட சென்னை - கன்னியாகுமரி தொழில் வழித்தட நிலஎடுப்பு அலுவலகத்தினை நிலஎடுப்பு பணியின் அவசியத்தை கருத்திற்கொண்டு மீண்டும் பெற்றுத்தர மாநில மையத்தினை வலியுறுத்துவதென தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## <u>தீர்மானம் - 2</u>

சமூக பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் அனைத்து உதவி தொகைகளும் அரசின் முழுமையான கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு சென்னை தலைமையிடத்திலிருந்து நேரடியாக பயனாளிகளுக்கு பட்டியலிட்டு வழங்கப்படுகிறது. தற்போது அரசாங்கம் சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர் அலுவலகங்களை மறுசீரமைப்பு செய்வது என்ற முடிவினை எட்டியுள்ளது. இதனடிப்படையில் சமூக பாதுகாப்புத்திட்ட அலுவலக பணியிடங்களை கலைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது. எனவே, சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர் அலுவலக பணியிடங்களை பாதுகாக்கும் நேர்வில் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்புத்திட்டப்பணிகளை சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாறுதல் செய்து சிறப்பு திட்டங்கள் மூலம் பெறப்படும் மனுக்கள் மீதான நடவடிக்கைகளை தொடர செய்யலாம். இதற்கான சமூக பாதுகாப்பு

திட்ட அலுவலக பணியிடங்களை பாதுகாப்பதுடன் இப்பணியினை செவ்வனே செய்திட கூடுதலாக ஒரு துணை வட்டாட்சியர் பணியிடத்தை பெறலாம் என்பதன் அடிப்படையில் மாநில மையம் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**<u>தீர்மானம் - 3</u>**

தமிழக அரசின் எண்ணற்ற புதிய திட்டங்களால் பெறப்படும் மனுக்களாலும் பொது மக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான சான்றுகள் பணிகள் தொடர்பாகவும் வருவாய்த்துறை போதிய புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாததால் அதீத பணி நெருக்கடிக்கு ஆளாகி சிக்கி தவித்து வருகின்றது. வருவாய்த்துறையில் தற்போதுள்ள பணியிடங்கள் அனைத்தும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த மக்கள் தொகையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பணியிடங்கள் ஆகும். ஆனால் தற்போது மக்கள் தொகையானது 3 மடங்கு உயர்ந்துள்ள நிலையில் அதற்கு ஏற்றாற்போல் புதிய பணியிடங்களை ஏற்படுத்துவதற்கான மறுசீரமைப்பு என்பது வருவாய்த்துறையில் நாளதுவரை இல்லை. இதனால் அரசு அறிவிக்கப்படும் திட்டங்களில் பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதிலும் பொதுமக்களின் அன்றாட தேவையான சான்றுகள் வழங்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதனால் வருவாய்த்துறை அலுவலர்கள் அதீத பணி நெருக்கடிக்கும், மன அழுத்தத்திற்கும் தொடர்ந்து ஆளாகிவருகின்றனர், தற்போது பொதுமக்களுக்கு வழங்கும் சான்று வழங்குவது தொடர்பாக வருவாய்த்துறை அலுவலர்கள் தொடர்ந்து மனஉளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர். மேலும், வருவாய்த்துறையில் இணைய வழி மூலம் 60 வகையான சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றுகள் வழங்குவதற்கு போதிய கால அவகாசம் வழங்காமல் 5 நாட்களுக்குள் சான்று வழங்க விசாரணை அலுவலர்களுக்கு அழுத்தம் கொடுப்பதால் எவ்வித விசாரணையுமின்றி சான்று வழங்கப்பட்டு வருகிறது. இதனால் வருவாய்த்துறை அலுவலர்கள் அதீத பணி நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக வாரிசு சான்று வழங்குவதற்கு உரிய கால அவகாசம் வழங்காமல் 7 நாட்களுக்குள் சான்று வழங்க தொடர்ந்து உயர் அலுவலர்களால் அழுத்தம் கொடுப்பதால் உரிய விசாரணையின்றி பரிந்துரை செய்வதால், அதன் பின்னர் ஏற்படும் பின்விளைவுகளுக்கு நமது வருவாய்த்துறை அலுவலர்கள் பெரும் பாதிப்பு அடைந்து வருகிறார்கள். ஆகவே, வாரிசு சான்று உள்ளிட்ட சான்றுகளுக்கு உரிய கால அவகாசம் (அதாவது முன்பிருந்தது போல்) வழங்க வேண்டும். பட்டா மாறுதல் இனங்களில் உரிய கால அவகாசம் வழங்காமல் தள்ளுபடி செய்யாமல் அனைத்தையும் பரிந்துரை செய்ய வேண்டும் என

நெருக்கடி கொடுப்பதால் பின்னிட்டு தொடர்ச்சியாக நீதிமன்ற வழக்குகளுக்கு வருவாய்த்துறை அலுவலர்கள் ஆளாகி வருகின்றனர். வாரிசுச்சான்று, பட்டா மாறுதல் மற்றும் இதர சான்றுகள் என்பது கடந்த 01.07.2024 முதல் FIFO (முதலில் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு முதலில் தீர்வு) என்கிற அடிப்படையில் தற்சமயம் சான்றுகள் தீர்வு காணப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் முதலில் விண்ணப்பித்த மனுதாரர் எவ்வித ஆவண ஆதாரத்தையும் சமர்ப்பிக்காமால் இருக்கும் நேர்வில் அடுத்து வரும் மனுதாரர்களுக்கு எவ்வாறு பரிந்துரை செய்ய இயலும். இதனால் ஏற்படும் காலதாமதங்களுக்கு நமது வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அதீத பணிநெருக்கடி ஏற்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி சான்றுகள் பணிகளில் இவ்வளவு நெருக்கடி இருக்கும் சூழ்நிலையில் தமிழக அரசின் புதிய சிறப்பு திட்டங்களில் பெறப்படும் ஆயிரக்கணக்கான மனுக்கள் மீது  விசாரணை செய்வதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்படுவதில்லை. இதனால் பொதுமக்களுக்கு தீர்வு காண்பதிலும் விசாரணை மேற்கொள்வதிலும் அதீத பணி நெருக்கடியினை சந்திக்க வருவாய்த்துறை அலுவலகர்கள் ஆளாகி வருகின்றனர். சான்றுகள் பணியுடன் கூடிய மனுக்கள் மீதான நடவடிக்கைகள் மேற்கொள்வதில் நெருக்கடிகள் இருந்த போதிலும் ஆய்வு கூட்டங்கள் என்பது அதிகளவில் நடத்தப்படுதால் மேலும் பணிநெருக்கடி எழுந்து வரும் நிலையில் தேவையற்ற ஆய்வுக்கூட்டங்களை தவிர்த்திடவேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் வருவாய்த்துறை அலுவலர்களின் அதீத பணி நெருக்கடி அதிகரித்து வரும் நிலையில் அதனை குறைத்திடும் நேர்வில் மாநில மையம் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவதென தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்-4:-**

சேலம் வருவாய் அலகில் ஓமலூர் வட்டமானது இரண்டாக பிரிக்கப்பட்டு காடையாம்பட்டி என்ற புதிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதுபோல ஆத்தூர் வட்டமானது இரண்டாக பிரிக்கப்பட்டு தலைவாசல் வட்டம் தற்போது உருவாக்கப்பட்டது. இந்த ஆத்தூர் வட்டத்திலிருந்து ஏற்கனவே கெங்கவல்லி வட்டம் பிரிக்கப்பட்டது. ஓமலூர் வட்டத்திலிருந்து காடையாம்பட்டி பிரிக்கப்பட்ட நிலையில், காடையாம்பட்டி வட்டத்திற்கு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் நாளதுவரை ஏற்படுத்தப்படவில்லை. ஆத்தூர் வட்டத்தினை பிரிப்பதற்கு முன்பாக ஆத்தூர் வட்டத்தில் இரண்டு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் இருந்து வந்தன. தற்பொழுது ஆத்தூர் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தலைவாசல் வட்டத்திற்கு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுபோல பெத்தநாயக்கன்பாளையம் வட்டத்திற்கும் மண்டல

துணை வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மூன்று வட்டங்களுக்கு தலைமையிடமாகவும், அதிக மக்கள் தொகை கொண்ட நகராட்சி பகுதியாகவும் இருக்கும் ஆத்தூர் வட்டத்திற்கு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்தப்படவில்லை. அதுபோல ஏற்கனவே ஆத்தூர் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட கெங்கவல்லி வட்டத்திற்கும் மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்தப்படவில்லை. எனவே சேலம் வருவாய் அலகில் மேற்குறிப்பிட்ட காடையாம்பட்டி, ஆத்தூர், கெங்கவல்லி வட்டங்களுக்கு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடங்களை ஏற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள மாநிலமையத்தினை வலியுறுத்துவதென தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**<u>தீர்மானம்-5:-</u>**

சேலம் வருவாய் அலகில் அதிக மக்கள் தொகையை கொண்ட மிகப்பெரிய வட்டமாக மேட்டூர் வட்டம் இருந்து வருகின்றது. இவ்வட்டத்தினை இரண்டாக பிரித்து மேச்சேரியினை தலைமையிடமாக கொண்ட புதிய வட்டத்தினை ஏற்படுத்திட மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக தமிழக அரசிற்கு ஏற்கனவே முன்மொழிவுகள் அனுபப்பட்டுள்ளது. எனவே, மாநிலமையம் இவ்வினத்தின் மீது தனிகவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாநில மையத்தினை வலியுறுத்துவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>தீர்மானம்-6:-</u>**

தமிழகத்தில் அரசின் திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்க்கும் தலையாய பணியை செய்து வருபவர்கள் வருவாய்த்துறை அலுவலர்கள், தமிழகத்தில் எண்ணற்ற துறைகள் இருந்தாலும் இரவு பகல் பாராது குறைவான ஊதியத்திற்கு கடும் பணிசுமையோடு பணிசெய்து வருபவர்கள் வருவாய்த்துறை அலுவலர்கள், இவ்வாறாக அதிகாரிகளின் கட்டளைக்கு அடிபணிந்து பல்வேறு பணிகள் மேற்கொண்டு வரும் நிலையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், வருவாய்த்துறை அலுவலர்களை தொடர்ந்து வஞ்சித்து வருவதினை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றது. இது தொடர்பாக மாநிலமையம் ஏற்கனவே மண்டல தர்ணா போராட்டத்தினை நடத்தியுள்ள போதிலும் இது தொடர்பாக தொடர்ந்து ஊழியர் விரோத போக்கினை கடைபிடித்து வரும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரை கண்டித்து மாநிலம் தழுவிய ஒரு ஆர்ப்பாட்டத்தினை நடத்திட மாநிலமையம் மத்திய செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்துவதென தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்-7:-**

தமிழகம் முழுவதும் உள்ள பொது மக்களுக்கு 60 வகையான சான்றுகளை ஆண்டு தோறும் 3½ கோடி என்கிற எண்ணிக்கையில் பொதுமக்களுக்கு வருவாய்த்துறை வழங்கி வருகின்றது. இந்த சான்றுகள் வழங்கும் பணியில் வருவாய்த்துறை அலுவலர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகி குறிப்பாக மாநகர பகுதியில் இயங்கி வரும் வட்ட அலுவலங்களில் பலநெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். சேலம் மாவட்டம், சேலம், சேலம் மேற்கு, சேலம் தெற்கு வட்டங்கள் மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள வட்டங்களாகும். இந்த மூன்று வட்டங்களில் ஒவ்வொரு வட்டத்திற்கும் குறைந்த பட்சம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சான்றுகள் எண்ணிக்கை என்பது மாதம்தோறும் 10,000 ஆகும். எனவே சான்றுகள் பணியினை செவ்வனே செய்திட மாநகர பகுதியில் உள்ளடக்கிய வட்டங்களுக்கு சான்றுகள் துணை வட்டாட்சியர் பணியிடங்கள் ஏற்படுத்திட ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள மாநில மையத்தினை வலியுறுத்துவதென தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்-8:-**

தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு அச்சாணியாக இயங்கி வரும் துறை நமது வருவாய்த்துறை. இத்துறை சார்ந்த அலுவலகங்களின் பல்வேறு உரிமைகளை தொடர்ந்து பறித்து வரும் தமிழக அரசானது தற்போது நீண்ட காலமாக வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரமாக இருந்து வந்த கருணை அடிப்படை பணி நியமனத்தினை முழுமையாக ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கருணை அடிப்படை பணி நியமனத்தினை பொறுத்த வரையில் அரசு ஏற்கனவே வழங்கி வந்த 25% என்பது தற்போது 5% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இது ஏற்புடையது அல்ல. எனவே ஏற்கனவே இருந்த 25% கருணை அடிப்படை பணி நியமனத்தை பெற்றுத்தர மாநில மையத்தை வலியுறுத்துவதென தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்-9:-**

சேலம் வருவாய் அலகில் ஓமலூர் வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள விமான நிலையம் தற்போது இயங்க தொடங்கியுள்ளது. அது மட்டுமில்லாது சேலம் மாவட்டத்திற்கென அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஓமலூர் விமானநிலையம் என்பது தர்மபுரி, நாமக்கல், ஈரோடு மாவட்டங்களுக்கு மையமாக அமைந்துள்ளதால் தமிழக முதல்வர், கவர்னர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர் வருகை அதிகரித்துள்ளது. இதனால் முக்கிய பிரமுகர் வரவேற்பு பணியில் தொடர்ந்து பின்னடைவு ஏற்பட்டு வருகிறது. அதனடிப்படையில் சேலம் மாவட்டம், ஓமலூர் விமான நிலைய

வரவேற்பு பணிக்கு ஒரு வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்தி தர ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில மையத்தினை வலியுறுத்துவதென தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**<u>தீர்மானம்-10:-</u>**

சேலம் வருவாய் அலகில் சேலம் கோட்டாட்சியர் அலுவலகமானது சேலம், சேலம் மேற்கு, சேலம் தெற்கு, ஏற்காடு மற்றும் வாழப்பாடி என ஐந்து வட்டங்களை உள்ளடக்கிய மிகப்பெரிய கோட்டமாக இருந்து வருகிறது. இந்த கோட்டாட்சியர் அலுவலகத்தில் உருவாக்கப்பட்ட பணியிடம் என்பது இரண்டு வட்டங்களை உள்ளடக்கியபோது உருவாக்கப்பட்ட பணியிடங்கள் ஆகும். தற்போது ஐந்து வட்டங்களை கொண்டுள்ளதால் பணிச்சுமை என்பது அலுவலர்களுக்கு அதிகரித்துள்ளது. பொது மக்களுக்கும் கோட்டாட்சியர் அலுவலத்தில் தீர்வுகான வருவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளது. எனவே சேலம் வருவாய் கோட்டத்தினை சேலம், சேலம் தெற்கு, சேலம் மேற்கு என ஒரு கோட்டமாகவும், ஏற்காடு, வாழப்பாடி வட்டங்களை உள்ளடக்கி ஒரு கோட்டமாகவும் பிரித்திட வேண்டும். அதுபோல சேலம் வருவாய் அலகில் ஆத்தூர் வருவாய் கோட்டமானது நான்கு வட்டங்களை உள்ளடக்கியது ஆகும். எனவே ஆத்தூர் வருவாய் கோட்டத்தினை ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம் வட்டங்களை உள்ளடக்கி ஒரு கோட்டமாகவும், தலைவாசல், கெங்கவல்லி வட்டங்களை உள்ளடக்கி ஒரு கோட்டமாகவும் பிரித்திட ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாநில மையத்தை வலியுறுத்தி தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

எனவே, மேற்கண்ட தீர்மானங்கள் மீது மாநிலமையம் தனிக்கவனம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் உண்மையுள்ள

**(அ.அருள்பிரகாஷ்)**
மாவட்டத்தலைவர்
TNROA, சேலம்

**(வெ.அர்த்தனாரி)**
மாவட்டச்செயலாளர்
TNROA, சேலம்